# காஞ்சீபுரத்தில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## ஜனாப் கலீபுல்லா வீர கர்ஜனை.

### தோழர் பாலசுப்பிரமணியம் சொற்பொழிவு.

### நிறைவேறிய தீர்மானம்

காஞ்சீபுரம், ஜன. 30:
ஏற்கனவே அறிவித்திருந்த
. கண்ணன் டாக்கீஸ் மைதா
த்தில் இன்று மாலை 5½ மணி
து பொதுக்கூட்டத்திற்கு
ய ஏற்பாடுகள் செய்யப்
இக்கூட்டம்,
ண்ணன் டாக்கி
வாவேற்புக்
இவைகளின்
தை நிலவ
ய இவ்வூர் நகர
ல கமிட்டியாரால்
ர்கள் கிருஷ்ணசாமி பாரதி,
ாகம் மனைவியார், கோவை
பி. சுப்பையா முதலியார் முத
லியோர் உட்பட்ட ஒரு காங்
ஸ் கூட்டம் ஆடிசன் பேட்
டை ஜவுளிக்கடை சத்திரத்தில்
ட்டுவிக்கப்பட்டது. பாரதி
பதிகள் வருவதாய்ச் சொல்லி
ட்டம் திரட்டியதற்கு வருந்தி,
வர்கள் வாராமை கண்டு
பொதுஜனங்கள்
ட்டத்திற்கு வந்தது குறிப்பி
த்தக்கது. ஏராளமான பிரப
தர்களும் விஜயம் செய்திருந்
ர். முஸ்லிம்களின் பிரசன்
ம் காணத்தக்கது.
முதலில் தோழர் எஸ். வி. லிங்
ஜனாப் கலீபுல்லா அவர்கள்
அறிமுகப்படுத்தி தலைமை
க்கக் கேட்டுக்கொண்டார்.
தோழர் கலீபுல்லா அவர்கள்
ன் னியாசப்பேசியதாவது:-

தோழர் கலீபுல்லா பேச்சு.

அன்புள்ள தோழர்களே!
நான் ஹிந்தி தேசமொழியா
தக் கண்டித்தும் தமிழைக்
கட்டாயபாடமாக வைக்கவேண்
என்று வற்புறுத்தியும் பேசி
ாக பண்டித ஜவஹர்
ரு அவர்கள் மலாய்
றப்பிரயாணம் செ
ந்து என்னை
ஒரு அரி
தார்.

தோடு அதன் காப்பி ஒன்றை ஜவஹர்லாலுக்கு பல நாட்களுக்கு முன்பு அனுப்பினேன். அதற்கு ஆலோசனை செய்து பதில் அனுப்புவதாக பதிலுரைத்தார். அவர் நாளது வரை ஆலோசனை செய்து பதில் அனுப்பவில்லை.

### ஹிந்தியைப் புகுத்தும் காரணம்.

தற்போது கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஹிந்தியை கட்டாய பாடமாக்கப் போவதின் முக்கிய காரணம் என்னவென்றால் தான் அரசியலில் உத்தியோகம் வகிக்கக் கூடாது, வகிக்க முடியாது என்ற மனப்பான்மையோடு இருந்த சமயம் பகற்கனவு காண்பது போல, ஒரு வடநாட்டு நண்பரிடம் நான் மந்திரியாக ஆனால் தமிழ் நாட்டில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குகிறேன் என்று சபதம் பண்ணினதாகச் சொல்லப்படுகிறது. தேர்தலின்போது இவர் இதை வெளியிடவே இல்லை. இவருடைய தேர்தல் வாக்குறுதியின் பேரில் அநேகர் இவரைத் தேர்ந்தெடுத்தனர். தற்போது ஹிந்தியை கட்டாய பாடமாக்கியே தீர்வேன் என்கிறார். இவரை யார் அந்தச் சமயத்தில் அவரிடம் அம்மாதிரி சபதம் செய்யச் சொன்னது? அவ்வாறு செய்ய இவருக்கு என்ன உரிமை இருக்கிறது? இவர் ஏன் இதை தேர்தலின் போது வெளியிடக் கூடாது? அப்படி வெளியிட்டிருந்தால் இவர் இவ்வளவு வெற்றி பெற முடியுமா? இப்போது வேண்டுமானால் ஹிந் பிரச்சினை ஒன்றை முன் தி மறுபடியும் தேர்த ற்கட்டும்! வெற்றிபெற என்பதை நீங்களே ங்கள் என்று பேசி

எஸ். முத்தையா
ளும் கூட்டம்
னாப் கலீபுல்
முகைக்கு
லவாக
ண்டு,
ழர்
ர்

அவர்கள் பேசியதாவது:—

### தோழர் பாலசுப்பிரமணியம் சொற்பொழிவு.

தலைவரவர்களே! தோழர்களே!

இன்று வந்திருக்கும் பிரபல தலைவர்களே பேசுவார்கள் என்னை ஒய்வெடுத்துக் கொள்ள விட்டு விடுவார்கள் என நினைத்தேனல்லாமல் இன்று ஜவுளிக்கடை சத்திரத்தில் நடக்கும் காங்கரஸ் தோழர்களின் கூட்டத்திற்குச் சென்று தோழர் சி. பி. சுப்பையா அவர்களும், மற்றவர்களும் என்ன வஞ்சகங்களைப் பேசுகிறார்கள் என்பதைக் கண்டும் கேட்டும் அறிந்து நாளை உங்கள் முன் சமர்ப்பிக்கலாம் என்றிருந்தேன். தலைவர்களையும் உங்களையும் பார்க்கும்போது இங்கும் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன.

இதே சமயம் சத்திரத்தில் ஒருகூட்டம் நடைபெறுகின்றது. அது காங்கரஸ் கூட்டம்—பாரத மாதாவின் புதல்வர்களின் கூட்டம்—தேசபக்தர்கள் கூட்டம்—சிறை சென்றவர்களின் கூட்டம்—ஏ கிளாசிலும் பி கிளாசிலும் இருந்து தியாகம் செய்தவர்களின் கூட்டம்—கதரணிபவர்களின் கூட்டம். நான் கதரணியவில்லை, சில்க்ஷர்ட் போட்டுக்கொண்டிருக்கிறேன். ஆகவே என்னைப்பார்த்து இவன் கெட்டான்டா தேசத்துரோகி என்று வெறுத்துரைக்கலாம். ஆனாலும் அங்கே போவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை. ஆனால், யார் தேசத்துரோகி என்பதை மாத்திரம் தெரிந்து கொள்ளுங்கள். இன்றைக்கு காங்கரஸ் பெயரைச் சொல்லி காந்தியின் பெயரைச் சொல்லி, பாரதமாதாவின் பெயரைச் சொல்லி வெறும் உப்புக்காச்சி ஜெயிலுக்குப் போனவர்களும் கதரணிகின்றனர் கிரிமினல் குற்றம் செய்து தண்டிக்கப்பட்டு சிறை புகுந்தவனும் கதரணிகிறான். தன்னையும் காங்கரஸ் பக்தனாக மதிக்க வேண்டுமென்று விரும்புகிறான். பல வஞ்சகர்களும் கதரணிகின்றனர். அகில இந்திய சர்க்கா சங்கத்தின் காரியதரிசியாயிருந்து கதர் நிதியின் புள்ளி விவரங்களை நன்கறிந்து கதரின் யோக்கியதாம்சங்களை வெட்ட வெளிச்சமாக்கி புஸ்தகம் எழுதிய கனம் எஸ் ராமனாதன் அவர்களும் கதரணிகிறார். ஜனநாயகத்துவத்தை மீறி சர்வாதிகாரத்துவமாக ஹிந்தியைப் புகுத்தியே தீர்வேன், உங்களுக்குப் பிரியமில்லையேல் மறுதேர்தலில் வேண்டுமானால் எனக்கு சைபர் போட்டு விடுங்கள் என்று கூறும் ஆச்சாரியாரும் கதரணிகிறார்.

### காங்கிரஸ்காரர் சொல்லும் செயலும்.

அந்த மாதிரி செய்யாதே ஐயா! இதனால் ஜனங்களுக்கு நன்மை விளையாது, துன்பப் படுவார்கள் என்று எடுத்துச் சொல்லும் நாங்கள் தேசத்துரோகிகளாம்; சுயநலமிகளாம்; ஏகாதிபத்தியக்காரர்களிடம் ஒப்பந்தம் பேசிக்கொண்டவர்களாம். யார் ஏகாதிபத்தியக்காரரோடே ஒப்பந்தம்செய்பவர்கள்? ...ன்று ஜவஹர்லால் வீரம்பேசி...ர். இன்று தன் சகோதரிக்கு மந்திரி வேலை வந்தது பரவாயில்லை என்றிருக்கிறார். சர்வாதிகாரம் கூடவே கூடாது என்கிறார். ஆச்சாரியாருக்கு ஹிந்தியைப் பொறுத்த வரையில் உள்ள பிடிவாதத்துக்கு ஒன்றும் செய்தவராகக்காணோம்.

சமஷ்டியை உடைக்க வேண்டும் என்கிறார் புலாபாய் தேசாய். இந்தப்பக்கம் பார்த்தால் லார்ட் லோதியனுக்கு சிற்றுண்டியளிக்கிறார். வைஸ்ராய் முகத்தில் விழிக்கக்கூடாது உத்திரவிடப்படுகிறது. கவர்னர் மாளிகையில் ஆச்சாரியார் போய், ‘நான் இருக்கிறவரையில் சமஷ்டிக்கு ஒன்றும் ஆபத்து நேரிடாது பயப்படாதீர்” என்று ஒப்பந்தம் பேசிவிட்டு வருகிறார் இன்னும் ஆறுமாத காலத்திற்குள்ளாகப் பாருங்கள்- தற்போது தண்டுத்தனுக்காகப் பேசும் சுபாஸ் சந்திரபோசின் நிலைமைவெட்ட வெளிச்சமாக விடும். சில நாட்களுக்கு முன்புகூட சீமையில் வெள்ளைக்காரரோடே டீ சாப்பிட்டுக்கொண்டே உடைத்துவிடுகிறேன் கிழித்துவிடுகிறேன் என்று வெளுத்துவாங்கியிருக்கிறார். ஆனால் வெள்ளையருக்குத் தெரியும் இவர் எதை உடைப்பாரென்று. டீ சாப்பிடும் பாத்திரத்தைத்தான் இவர் உடைக்கக்கூடும்! இதற்கு மன் ஆர்ப்பாட்டமாக இருந்தவர்தான் ஜவஹர்லால்கூட ஆனால் இப்போது லண்டன் “டைம்ஸ்” பத்திரிகை இவருக்கு (Mode-Rate) மிதவாதி என்று மகுடமிட்டழைக்கிறது என்று பேசினார்.

### மீண்டும் ஜனாப் கலீபுல்லா.

(மறுபடியும் ஜனாப் கலீபுல்லாவின் வருகை) பிறகு கொஞ்ச நேரம் பொறுத்து கலீபுல்லா அவர்கள்பேசியதாவது:-

கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மந்திரி பதவி வகித்து அநேக இடையூறுகள் விளைவித்து வருகிறார்.

ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம் இரட்டிக்கப்பட்டது. இதன் மூலம் யாருக்குக் கஷ்டம்? ஏழைகளுக்குத்தானே. பணக்காரன் ஏன் ரிஜிஸ்தராபீசுக்குப் போகப் போகிறான்? விவசாயியைப்போன்ற ஏழைதான் தன் நிலத்தை விற்கவோ, அடகுவைக்கவோ ரிஜிஸ்தராபீசுக்குப் போக வேண்டும். மேலும் ரிஜிஸ்த்ரேஷன் மூலம் வந்த வருவாயில் லாபமில்லையா? அல்லது வருவாய் குறைந்தா விட்டது?

### வரிவஜாவும் கடன் நிவாரண மசோதாவும்.

ஏழை விவசாயிகளுக்கு வரிப் பளுவு அதிகம் என்பது எங்களுக்குத்தான் தெரியும். ஆகவே தான் எழுபத்தைந்து லட்சம் ரூபாய் வரிவஜா செய்தோம். அந்த சமயம் எங்களை இந்த ஆச்சாரியார் கோஷ்டி வைதது அவ்வளவு இவ்வளவு அல்ல. ஒரு கோடி ஐம்பது லட்சம் வரிவஜா செய்வோமென்றார்கள். நாங்களும் செய்யட்டும் பார்க்கலாம் என்று சவால் கூறினோம். இது வரையில் நாங்கள் வஜா செய்ததையே அமுலுக்குக் கொண்டு வரவில்லை. அதுவும் அடுத்த வருஷம் முடியாதாம். கடன் மசோதா வந்துளது. அதனால் யாருக்குமே நன்மையில்லை. கடன் கொடுத்தவனும் கஷ்டப்பட வேண்டியது தான். வாங்கினவனும் கஷ்டப்பட வேண்டியது தான். மழை பெய்த உடன் குடியானவர்கள் மாடு வாங்க என்றும், விதை வாங்க என்றும் கடன் வாங்குவார்கள். இப்போது 100-க்கு 6¼ வட்டி ஏற்படும் ஆனால் லேவாதேவிக்காரர்களுக்குக் கட்டுபடி ஆகாது. கடன்பட்டவன் கடன் கொடுத்தவனை ஏமாற்றிவிட இம்மசோதா உதவுவதால் இதன்படி செய்யும் விவசாயிகளுக்கு மறுபடியும் கடன் கிடைக்காது

நேற்று சட்டசபையில் கனம் ஆச்சாரியார்என்ன சொன்னார் தெரியுமா? நான் கொண்டு வரும் மசோதாவின் மூலம் இம்மாகாணத்து ஜனங்களுக்கு துன்பங்கள் ஏற்படுமானால் பிற மாகாணத்தவர் வேண்டுமானால் இம்முறையைக் கையாளாதிருக்கட்டும் என்றார். இதனால் எவ்வளவு அக்கிரமம் நிறைந்த மசோதாவை அவர் தயார் செய்திருக்கிறார் என்பது தெரிய வருகிறது பாருங்கள் என்றும் மற்றும் பலவும் பேசி தனக்கு இச்சந்தர்ப்பத்தை யளித்ததற்காக வந்தனம் செலுத்தி அமர்ந்தார்.

### குரைஷி சாயபு

பிறகு தோழர் குரைஷி சாயபு அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதை தோழர் கே வச்சிர வேலு முதலியார் பி. ஏ. எல். டி. அவர்கள் மொழிபெயர்த்தார். அவர் பேசியதின் சாரமாவது-

இந்திய சமூகத்தில் மிகச் சிறுபான்மையோரான ஆரியர் தங்கள் சூழ்ச்சியால் பெருவாரியானவர்களை முற்காலத்தில் மதங்களின் சார்பாக ஆச்சாரியர்கள் என்றும், குருமார்கள் என்றும் இருந்து கொண்டுநம்மை அடக்கி ஒடுக்கி ஆண்டது போதாதென்று தற்போதும் உங்களை ஏமாற்றி மந்திரிபதவிவகித்துமுஸ்லீம் சமூகத்தவரையும், திராவிடரையும் முன்னைப்போலவே அடக்கியாளபாஷையில் கை வைக்கிறார்கள்.

நம்கலையும், நாகரிகமும் நசித்து போனால் வேறொன்றும் நமக்கில்லை. ஆகவே நாம் விழிப்படைந்து இச்சூழ்ச்சியை வேரறுக்கசலியாது உழைக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு ஹிந்தி கட்டாயபாடமாக்கப்போகும் பள்ளிகளைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறினதும் கூட்டம் மங்களகரமாக சுமார் இரவு 9 மணிக்கு முடிந்தது.

---

## வடராமநாதபுரம் ஜில்லா போர்டு

### திருப்பத்தூரிலிருந்து சிவகங்கைக்கு மாற்றம்.

(ஒரு நிருபர்)

காரைக்குடி, ஜன 30

நேற்று மாலை கூடிய டிஜில்லா போர்டு கூட்டத்தில் திருப்பத்தூரில் இருக்கிற ஆபீஸை சிவகங்கைக்கு மாற்றுவதெனத் தீர்மானித் திருக்கின்றனர்